# திருக்குறள் உணர்த்தும் மேலாண்மைப் பண்புகள்

15

**முனைவர் க.மகேஸ்வரி,**

**உதவிப்பேராசிரியர், மேலாண்மையியல் புலம்,**

**SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,**

**காட்டாங்குளத்தூர், 603203.**

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வு கட்டுரை, திருக்குறளின் 'இறைமாட்சி' அதிகாரத்தில் இடம்பெறும் குறட்பாக்கள் மூலம் மேலாண்மைத் துறையில் தலைமைத்துவத்தின் பங்கினை ஆராய்கிறது. ஒரு தலைவன் கொண்டிருக்க வேண்டிய நற்பண்புகள், தீர்மான திறன், ஒழுக்கநிலை, ஆலோசனை கேட்கும் திறன், மனித உறவுகளை பேணும் பண்பு போன்ற அம்சங்கள் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும், இக்குறள்களில் கூறப்படும் தலைமைத்துவக் கோட்பாடுகள் நவீன மேலாண்மை நடைமுறைகளுடன் ஒப்பிடப்பட்டு அவற்றின் பொருத்தமும் நிலைத்தன்மையும் விளக்கப்படுகின்றன. இவ்வாய்வு, திருக்குறள் ஒரு சிறந்த தலைமை மற்றும் மேலாண்மை வழிகாட்டியாக திகழ்கிறது என்பதை வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்**

தலைவன், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்

தமிழ் இலக்கியத்தின் முத்தாக விளங்கும் திருக்குறள், மனித வாழ்வின் ஒழுக்கநெறிகளை மட்டுமின்றி, மேலாண்மை மற்றும் தலைமைத்துவத்திற்கான உயர்ந்த கோட்பாடுகளையும் வழங்குகிறது. குறிப்பாக 'இறைமாட்சி' அதிகாரம், ஒரு தலைவன் அல்லது அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறும் முக்கியமான பகுதியாகும். இதில் வெளிப்படும் கருத்துக்கள் நவீன மேலாண்மைத் துறையிலும் பொருந்தக்கூடியவையாகும். திறமையான தலைமைத்துவம், சரியான முடிவெடுக்கும் திறன், மக்கள் நலனில் அக்கறை, ஒழுக்கம் போன்ற பண்புகள் ஒரு நல்ல நிர்வாகத்தின் அடித்தளமாகும். ஆகையால், திருக்குறள் உணர்த்தும் மேலாண்மை பண்புகளுள் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மேலாண்மை என்பதன் பொருள்**

மேலாண்மை என்பது ஒரு குழுவை அல்லது நிறுவனத்தை அதன் இலக்குகளை அடைவதற்காக திட்டமிட்டு ஒருங்கிணைந்து வழிநடத்தி கட்டுப்படுத்தும் செயல்முறையாகும்

மேலாண்மை என்ற சொல்லை மேன்மை அல்லது மேல் +ஆளுமை எனப் பிரிக்கலாம் ஆளுமை என்பது நிர்வாகத்தை குறிக்கக்கூடியது. நிர்வகித்தல் என்பது நிறுவனத்திற்கு

மட்டும் பொருந்தக் கூடியது அல்ல. தனிமனித வாழ்வுக்கும் பொருந்தும்.: மனித வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் மேலாண்மை சிந்தனை கலந்திருக்கிறது வீடு முதல் நாடு வரை மேலாண்மை பண்புகள் அமைந்துள்ளது

மேலாண்மைத் துறையில் பழந்தமிழர் சிறந்து விளங்கியுள்ளனர் மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் துளிர்விட தொடங்கிவிட்டது மேலாண்மை என்பது எதையும் சரியாக செய்வது தலைமைத்துவம் என்பது சரியான காரியத்தை செய்வது என்கிறார் பீட்டர் டிரக்கர்

நிர்வாக மேலாண்மை என்பது திட்டமிட்ட இலக்குகளை அடைவதற்கு மட்டுமல்லாமல் செயல் திறனை மேம்படுத்தவும் வளங்களை வீணாக்காமல் வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்லவும் வழி வகுப்பதாகும்

சீனத்தில் யாங்க் (சேவ்) சவ் என்கிற பகுதியில் பல இளைஞர்கள் நீச்சலில் வீரராக இருந்தனர். நீச்சல் தன்னம்பிக்கையை தருவதோடு வாழ்வில் எதிர்நீச்சல் போடவும் கற்றுத் தருகிறது. அங்கு ஆழமான நதியை சில இளைஞர்கள் கடக்கும்போது, மலைப்பிடிப்பு பகுதியில் வெள்ளம் ஏற்பட்டு படகு கவிழ்ந்தது. அனைவரும் நதியில் விழுந்து நீச்சல் அடிக்க ஆரம்பித்தனர் அவர்களில் மிகச்சிறந்த நீச்சல் வீரன் ஒருவனும் இறந்தான்

ஆனால் அவன் சரியாக நீந்தாமல் தத்தளித்தான் அப்பொழுது ஒருவர் நீ சிறந்த நீச்சல் வீரர் ஆயிற்றே, ஏன் இவ்வளவு பின் தங்குகிறாய் என்று வினாவினார். தங்களைக் காட்டிலும் சிறந்த வீரன் தத்தளிப்பது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது அப்போது அந்த வீரன் நான் என்னுடைய கட்சையில் ஆயிரம் பொற்காசுகளை கட்டிக் கொண்டிருக்கிறேன்

அதனால்தான் என்னால் வேகமாக நீந்த முடியவில்லை என்று பதிலளித்தான். அதற்கு அவர் அவற்றை தூக்கி எறிந்து விட்டு நீந்தி கரைசேர் என வற்புறுத்தினார். அவனுக்கு அவற்றை விட மனமில்லாமல் தன் உயிரை இழந்தான். எந்த நேரத்தில் எது முக்கியம் என்று சரியான முடிவு எடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்குகிறது அதுவே சிறந்த மேலாண்மை என்பதை தான் தொன்மை மிகுந்த இந்த கதை சொல்கிறது

**தலைவன் என்பவர் யார்**

எந்தச் செயல்கள் நாட்டிற்குத் தேவையானவை, நன்மை பயப்பவை, தனக்கு வெற்றியைத் தருபவை என்று சிந்தித்து முடிவெடுப்பது ஒரு மன்னனின் கடமை. எந்தத் தொழிலைத் தொடங்கினால் வெற்றிபெற முடியும் என்று முடிவு செய்யவேண்டியது ஒரு நிறுவனத்தின் தலைவரின் பொறுப்பு. எந்தச் செயல்கள் நாட்டுமக்களுக்கு அல்லது தன் இனத்திற்குத் தேவை என்று போராட்டங்களைத் தொடங்குவதற்குமுன் முடிவெடுப்பது மக்களுக்காக உழைக்கும் தலைவர்களுக்குத் தேவை. இவ்வாறு முடிவெடுக்கும்பொழுது, தலைவர்களின் எண்ணம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்களின் வெற்றி உயர்ந்ததாக இருக்கும் என்பது வள்ளுவரின் கருத்து.

நீரில் உள்ள மலரின் உயரம் அந்த நீரின் ஆழத்தைப் பொருத்தது. நீரின் ஆழம்

அதிகமாக அதிகமாக, மலரைத் தாங்கி நிற்கும் தண்டின் நீளமும் அதிகரித்துகொண்டே இருக்கும். அதுபோல், ஒருவனின் எண்ணம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் உயர்வடைகிறான் என்று வள்ளுவர் கூறுகிறார்.

*வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*

***உள்ளத்து அனையது உயர்வு.*** (குறள் – 595)

உயர்ந்த எண்ணத்தைச் செயல்படுத்தினால்தான் வெற்றி அடைய முடியும். அந்த உயர்ந்த எண்ணத்தை செயல்படுத்துவதற்குப் பலருடைய உதவிகள் தேவை. ஒரு தலைவன் என்பவன், தன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு, மற்றவர்களை ஒருங்கிணைத்து, அவனுடைய இலட்சியத்தை மற்றவர்களும் தங்கள் இலட்சியமாகக்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவித்து, அவர்களுடைய உதவியால் தன் இலட்சியத்தை அடையும் ஆற்றல் உடையவனாக இருக்கவேண்டும் .

**தலைவனுக்குரிய அடிப்படைப் பண்புகள்**

பலரையும் ஒருங்கிணைத்து, ஊக்குவித்து அவர்களுடைய உதவியாலும் ஒத்துழைப்போடும் தன் இலட்சியத்தை ஒரு தலைவன் அடைய வேண்டுமானால், அவனிடம் பல சிறந்த பண்புகள் இருக்க வேண்டும். அந்தப் பண்புகள் என்னவென்று பார்ப்போம்

திருவள்ளுவர் காலத்தில் தலைமை என்றால் அரச பதவியே இருந்திருக்கவேண்டும். இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அரசனின் பெருமைகளை எடுத்துரைத்துள்ளார். அரசனுக்கு அடுத்து அமைச்சர்களின் பெருமைகளை உரைத்துள்ளார். அரசனும் அமைச்சரும் மட்டும் தான் தலைமைப் பண்புக்குரியவர்களா… என்று சிந்தித்தால் அவர்கள் மட்டுமில்லை.. ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் தலைமைப் பண்பு உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும்.

திருக்குறளில் தலைமைப் பண்புகள் என்பது ஒரு சிறந்த தலைவன், மன்னன் அல்லது மேலாளர் கொண்டிருக்க வேண்டிய அறநெறிகள், தகுதிகள் மற்றும் பொறுப்புகளை விளக்குகிறது.

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**

**எஞ்சாமை வேந்தற் கியல்பு (திருக் – 382)**

எதிரிகளைக் கண்டு பயம் கொள்ளாமல், சவால்களை கண்டு அஞ்சாமல், கடினமான சூழலிலும் தைரியமாக முடிவெடுத்தல். மக்களிடம் அன்பும், தாராள மனப்பான்மையுடன் வறியவர்களுக்குக் கொடுத்துதவும் பண்பு. ஆழ்ந்த அறிவும், சூழ்நிலையை ஆராய்ந்து செயல்படும் அறிவுடைமையும், தொலைநோக்குப் பார்வையும் கொண்டு சரியாக செயல்படுதல். விடாமுயற்சியுடன் சோர்வின்றி செயல்படுதல் என்பன (திருக் – 382) இக்குறளின் படி அஞ்சாமை, ஈகை , அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு குணங்களும் ஒரு

அரசனுக்கு, தலைவனுக்குக் குறையின்றி இருப்பது இயல்பாகும். இது ஒரு சிறந்த தலைவனுக்கான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது.

வடநாட்டு மன்னர்கள் தமிழரை இகழ்ந்தபோது, சேரன் செங்குட்டுவன் இமயமலை வரை படையெடுத்துச் சென்று, அச்சமின்றிப் போரிட்டு, அறிவுப்பூர்வமாகத் திட்டமிட்டு, கள்வர் கோமான்களை வென்று, இமயத்தில் சேர முத்திரையைப் பதித்தான் என்பதை சிலம்பு தெரிவிக்கிறது.இந்நிகழ்வில் சேர மன்னனின் அஞ்சாமை, அறிவு ஊக்கம் வெளிப்படுகிறது.

கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் போன்றோர், நாட்டை ஆள்வதோடு, புலவர்களுக்கும் மக்களுக்கும் குறிப்பறிந்து கேட்காமலேயே கொடுக்கும் ஈகை குணம் கொண்டிருந்தனர் என தமிழிலக்கியங்கள் வழி அறிகிறோம்.

இந்நான்கு குணங்களையும் கைக்கொண்டால் மட்டுமே வெற்றியை நிலைநாட்ட முடியும் என்று வலியுறுத்துகிறது.

இது, தலைமைப் பண்பு, கொடையுள்ளம், பகுத்தறிவு, முயற்சி ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

தற்காலத்தில் தலைவர் என்பவர், சவால்களைக் கண்டு அஞ்சாமலும், மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மையுடனும், சரியான முடிவுகளை எடுக்கும் அறிவுடனும், இடையறாத ஊக்கத்துடனும் செயல்பட வேண்டும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. .

தம் உரிமைகளுக்கு வரையறை வகுத்துக் கொண்டு செயல்படும் மனிதர்கள் பலர், ஒன்று கூடி வாழும் சமுதாயத்தில் அரசின் பணிகளாக

**அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடைய தரசு" (குறள் 384)**

என்கிறார். இது சிறந்த ஆட்சியாளருக்கான இலக்கணமாகவும் திருவள்ளுவரால் கூறப்பட்டுள்ளது. நீதியை நிலைநாட்டி அறத்திலிருந்து வழுவாது செயல்படுதல். நாட்டிற்குத் தீமை விளைவிக்கும் காரியங்களை ஒழித்தல், தீயவற்றை நீக்கி, வீரமும் மானமும் உடையவராக இருத்தல்.

குடிமக்கள் எல்லோரும் அறம் தவறாத விதத்தில் தத்தம் உரிமைகளைத் துய்ப்பதற்கு ஏற்ற சமுதாய அமைப்பை ஆக்கலும் அதைக் காத்தலும் அதற்குத் தடையாக இருக்கும் அல்லவற்றை நீக்கலும் அரசினுடைய பணிகளாகும்.

மனுநீதிச் சோழன் தன் மகனான வீதிவிடங்கன் தேர்க்காலில் பட்டு கன்று இறந்தபோது, பசுவின் நீதிக்காகத் தன் மகனையும் அதே தேர்க்காலில் இட்டு நீதியை நிலைநாட்டியது, 'அறனிழுக்கா தல்லவை நீக்கி' என்ற குறளுக்கு மிகச்சிறந்த சான்றாகும்.

வருவாயைப் பெருக்குதல், சேர்த்தல், பாதுகாத்தல் மற்றும் முறைப்படி செலவிடுதல்

ஆகிய நான்கு திறன்களையும் கொண்டதே ஒரு சிறந்த நிர்வாகம். இது ஒரு நாட்டின் பொருளாதாரச் சக்கரத்தைச் சுழற்றும் அடிப்படை கோட்பாடாகும்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு (திருக் – 385)**

இயற்றல் என்பது பொருள் வருவதற்கான புதிய வழிகளை உருவாக்குதல். ஈட்டல் என்பது வந்த வருவாயைச் சேர்த்தல். காத்தல் என்பது சேர்த்த பொருளைப் பிறர் கவராமல் பாதுகாத்தல். வகுத்தல் என்னபது காத்த பொருளை அறம், பொருள், இன்பம் நோக்கிப் பிரித்துச் செலவிடுதல்.

இயற்கையிலேயே குடிமக்களுக்கான உரிமைகளுக்கும் அவற்றை வறையறுக்கும் அறத்துக்கும் எந்த குறைபாடும் ஏற்படாத வகையில் அல்லவை நீக்கி வர்க்கப் பிளவு இல்லாத சமுதாய அமைப்பை உருவாக்கிக் காப்பதே அரசின் முதற்கடமையாக அறியப் பெறுகிறது.

கரிகால சோழன் காவிரிக்குக் கல்லணை கட்டியது. விவசாயத்தை மேம்படுத்தி வரி வருவாயை மேம்படுத்தி, அந்த வருவாயைக் கொண்டு காவிரி நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, விவசாயத்தை வளப்படுத்தி, பெருக்குவதன் மூலம் **பொருளைக் காத்த வகுத்தல்** பணியைச் செய்தான் என வரலாறு குறிப்பிடுகிறது.

இந்தக் குறள், வருவாய் உருவாக்குவது மட்டும் அரசனின் கடமை அல்ல, அதைப் பாதுகாத்து, மக்களுக்குத் தேவையான நல்ல திட்டங்களுக்குச் சரியாகச் செலவிடுபவனே சிறந்த ஆட்சியாளன் என்று வலியுறுத்துகிறது

அப்படிப்பட்ட அமைப்பைக் காப்பதிலும் அல்லவற்றை நீக்கும் பணியிலும் தண்டனை அல்லது குற்றங்கடிதல் என்ற நடவடிக்கையும் தேவை. இல்லாவிட்டால் தனிமனிதக் குற்றங்களைக் காட்டிலும் அதிகார அத்துமீறல்கள் அதிகரிக்கும் என்பதை உணர்ந்த திருவள்ளுவர் அக்கோட்பாட்டை,

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப் படும் (திருக் – 388)**

என்கிறார். மன்னன் தன் குடிகளைக் காக்க, அறத்தை நிலைநாட்ட வேண்டும். மக்களைக் காப்பது மன்னனின் கடமை (முறை செய்து, பிறர் நலியாமல் காத்தல்). பிறப்பால் மனிதனாக இருந்தாலும், செயல்களால் கடவுளுக்கு நிகரானவன்.

**சிபிச்சக்ரவர்த்தி,** புறாவைக் காக்க, தன் உடலையே அறுத்துக் கொடுத்தான். தன் குடிமக்கள் மட்டுமல்ல, அடைக்கலம் புகுந்த உயிர்களையும் காப்பவன் என்ற அளவில் இது மிகச்சிறந்த சான்றாகும்.

**இராமாயணத்தில்,** இராமன் 'நீதி தவறா மன்னனாக' (தர்மத்தைப் பேணுபவனாக) போற்றப்படுகிறான். இராமராஜ்ஜியம் என்பது சிறந்த ஆட்சியின் அடையாளமாக,

அரசனைத் தெய்வமாக மதிக்கும் கலாச்சாரத்தின் உச்சமாகக் கருதப்படுகிறது.

மன்னவன் மக்களுக்கு இறைவனாக கருதப்படுவது அவனுடைய அதிகாரத்தால் அல்ல, அவனது நேர்மையான செயல்களால் மட்டுமே என்பதை உணரமுடிகிறது.

மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும்,

விசும்பு தைவரு வளியும், வளித் தலைஇய தீயும்,

தீ முரணிய நீரும், என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை போல

போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,

வலியும், தெறலும், அளியும், உடையோய்! (புறம் – 2)

இது ஐம்பெரும் பூதங்களின் தன்மைகளை விவரித்து, சேர மன்னன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை, அந்த இயற்கைப் பண்புகள் கொண்டவனாக முரஞ்சியூர் முடிநாகனார் வாழ்த்தும் பாடலாகும்.

மன்னனின் கடமை நீதி வழங்குவது மட்டுமல்ல. மக்களைக் காப்பதும் தான். இப்பணியை முறையாகச் செய்யும்போது மன்னன் தெய்வமாகவே கருதப்படுகிறான் என்பதை அறியமுடிகிறது.

**"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**

**மீக்கூறும் மன்னன் நிலம்." (திருக் – 389)**

மக்களுக்குக் காட்சிக்கு எளியவனாகவும் (எளிதில் காணக் கிடைப்பவன்), கடுஞ்சொல் சொல்லாதவனாகவும் ஒரு அரசன் இருந்தால், அவனது நாட்டை இந்த உலகம் உயர்த்திப் பேசும்.

எளிமையும், மென்மையான பேச்சும் ஒரு தலைவனை மக்களிடத்தில் உயர்த்தி, அவன் நிலத்தைத் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும் என்பதை இக்குறள் காட்டுகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலன் வழக்கில், "யானோ அரசன், யானே கள்வன்" என்று தன் தவறை உணர்ந்து, அவசரமாகத் தீர்ப்பு வழங்கியதால் ஏற்பட்ட குற்ற உணர்ச்சியில் உயிரை விட்டான். அரசனின் எளிமையான செயல்பாடும், தவறை உணரும் பண்பும் அவனது நீதியை உலகறியச் செய்தது

**முடிவுரை**

திருக்குறள் உணர்த்தும் தலைமைத்துவப் பண்புகள், மேலாண்மைத் துறையில் வெற்றியை அடைய அத்தியாவசியமானவை என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. ‘இறைமாட்சி’ அதிகாரத்தில் கூறப்படும் நல்லாட்சி நெறிகள், ஒரு தலைவன் நேர்மை, நியாயம் மற்றும் அறிவுடனும் செயல்பட வேண்டியதையும் வலியுறுத்துகின்றன. மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் தலைமைத்துவம், ஒழுங்கான நிர்வாகத்தை உருவாக்கும்.

இவ்வாறு திருக்குறள் வழங்கும் மேலாண்மைச் சிந்தனைகள், காலத்தால் அழியாதவை என்றும் இன்றைய தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் வழிகாட்டியாக அமைவவை என்றும் இம்முடிவுரை வலியுறுத்துகிறது.

**துணை நூல்கள்**


1. சாரங்கபாணி இரா, திருக்குறள், இயல்புரை, மணிவாசகர் நூலகம், முதல் பதிப்பு ,2002
2. சேயோன், பன்முக நோக்கில் திருக்குறள், மயிலை திருவள்ளுவர் தமிழ் சங்கம், மயிலாப்பூர் சென்னை, முதற் பதிப்பு 2001.
3. சேயோன். ஆளுமை வளர்ச்சிக்கு திருக்குறள் அமுதமொழி, மயிலை திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம், மயிலாப்பூ, சென்னை, பதிப்பு 2016.

இணையம்